ஊத்தங்கரை, போச்சம்பள்ளி வட்டங்களில் கனமழையால் உயிர்சேதம் ஏற்படவில்லை: அமைச்சர் அர.சக்கரபாணி தகவல்

கிருஷ்ணகிரி, டிச. 6–

பெஞ்சல் புயலினால் பாதிக்கப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை பேருந்து நிலையம் பின்புறம் உள்ள பரசனேரி ஏரி, அகரம் அரசு மேல்நிலைப் பள்ளி, கல்லாவி அரசு மேல்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள முகாம் ஆகியவற்றை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, கலெக்டர் கே.எம்.சரயு, பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, நிவாரண பொருட்களை வழங்கினார்.

பின்னர் அமைச்சர் பெஞ்சல் புயலினால் பாதிக்கப்பட்ட ஊத்தங்கரை பேருந்து நிலையம் பின்புறம் உள்ள பரசனேரி ஏரியிலிருந்து உபரிநீர் வெளியேற்றும் பணிகள் மற்றும் பாதிப்படைந்த பகுதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, அகரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் மழைநீர் தேங்கப்பட்டு நீர் வெளியேற்றப்பட்டதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, கல்லாவி அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற முகாமில் சந்திரப்பட்டி, கல்லாவி, மாரம்பட்டி, மேட்டுத்தாங்கல், மூங்கிலேரி, நொச்சிப்பட்டி, பெரியகொட்டகுளம், புதூர்புங்கனை ஆகிய ஊராட்சிகளுக்கு உட்பட்ட 125 நபர்களுக்கு அரிசி, பருப்பு, காய்கறிகள், போர்வை, வேஷ்டி, சேலைகள் உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

அமைச்சர் நேரில் ஆய்வு

தொடர்ந்து, கல்லாவி ஊராட்சி, துரைசாமி நகர், கோவிந்த செட்டி குமாரர் சென்னகேசவனின் குடிசை வீடு மழை காரணமாக இடிந்து பாதிப்படைந்துள்ளதை நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறினார்.

மேலும், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ரூ.3.50 லட்சம் மதிப்பில் வீடு கட்டி கொடுக்க ஊரக வளர்ச்சி துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும், துரைசாமி நகர் பகுதியில் மழை காரணமாக மின்கம்பங்கள் சாய்வான நிலையில் மின் கம்பிகள் தாழ்வாக இருப்பதை பார்வையிட்டு, உடனடியாக தாழ்வாக உள்ள மின் கம்பிகளை சரிசெய்து வழங்க மின்சார துறையினருக்கு உத்தரவிட்டார்.

ஊத்தங்கரையில் அதிகனமழை

பின்னர் அமைச்சர் தெரிவித்தாவது:

பெஞ்சல் புயலினால் பெய்த கனமழையால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஊத்தங்கரை மற்றும் போச்சம்பள்ளி ஆகிய இரண்டு வட்டாரங்களில் பாதிப்பு ஏற்பட்டது. தமிழ்நாட்டிலேயே ஊத்தங்கரையில் தான் 50 செ.மீட்டர் மழை பெய்திருக்கிறது. இந்நிலையில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு பணிகள் மற்றும் நிவாரண நடவடிக்கை களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து அதன் விபரங்களை தலைமை யிடத்திற்கு தெரிவிக்க வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் முத்துசாமி பொறுப்பு அமைச்சராக நியமிக்கப் பட்டார்.

அதன்படி, கடந்த மூன்று நாட்களாக பாதிக்கப்பட்ட இடங்களை நேரடியாக சென்று ஆய்வு செய்து, அதன் விபரங்களை தலைமையிடத்திற்கு தெரிவித்தார்கள். மேலும், பாதிக்கப்பட்ட இடங்களில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து கலெக்டர் முன்னிலையில் அனைத்து துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

முகாம் மக்கள் வீடு திரும்பினர்

போச்சம்பள்ளி மற்றும் ஊத்தங்கரை வட்டங்களில் பாதிக்கப்பட்ட பொதுமக்களை தங்க வைப்பதற்காக 7 முகாம்கள் அமைக்கப்பட்டு, அவர்களுக்கு தேவையான உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது. மேலும், துணை முதலமைச்சர் நிவாரண முகாம்களில் தங்கியுள்ள பொதுமக்களை நேரில் சந்தித்து, ஆறுதல் கூறி, நிவாரண பொருட்கள் அடங்கிய தொகுப்புகள் வழங்கப்பட்டது.

தொடர்ந்து, கலெக்டரின் அறிவுறுத்தலின்படி ஒசூர் மாநகராட்சியிலிருந்து 100 தூய்மை பணியாளர்கள், சூளகிரி, வேப்பனப்பள்ளி ஆகிய ஒன்றியங்களிலிருந்து 100 தூய்மை பணியாளர்கள் என மொத்தம் 200 தூய்மை பணியாளர்களைக் கொண்டு, பாதிக்கப்பட்ட வீடுகளில் புகுந்த தண்ணீரை வெளியேற்றி, கிருமி நாசினி தெளிக்கப்பட்டது. இதனால், தற்போது சிங்காரப்பேட்டை சமுதாயக் கூட நிவாரண முகாம் தவிர 6 முகாம்களில் உள்ள பொதுமக்கள் தங்களது வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

தனித்தனியாக நிவாரண உதவி

முதலமைச்சர், பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் வீடுகள், குடிசை வீடுகள், பயிர்கள், கால்நடைகள் சேதமடைந்தால் அவற்றிற்கான நிவாரண உதவிகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக வழங்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார். அதற்கான கணக்கெடுப்பு பணிகளை மேற்கொள்ள வருவாய் துறை சார்பாக 38 குழுக்கள் அமைக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இக்குழுக்கள் கணக்கெடு ப்பணியை முடித்து தலைமையிடத்திற்கு அனுப்பி அதற்கான நிவாரணத்தொகை உடனடியாக பாதிக்கப்பட்டவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும். அதேப்போல மாவட்ட முழுவதும் 50 இடங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், சேதமடைந்த தேசிய நெடுஞ்சாலையின் சுற்றுசுவர் கட்டுவதற்கும், வீடுகள் ஏதாவது பாதிக்கப்பட்டிருந்தால் அந்த வீடுகளுக்கெல்லாம் புதியதாக வீடுகள் கட்டுவதற்கும், ஏற்கனவே கட்டப்பட்டு வீடுகள் பழுதடைந்திருந்தால் அதற்கு முதலமைச்சர் இந்த ஆண்டு 2 லட்சம் வீடுகள் பழுதுபார்ப்பதற்காக ரூ.2000 கோடி நிதி ஒதுக்கி தந்துள்ளார்கள். அதனடிப்படையில் பாதிப்படைந்த வீடுகள் சரிசெய்வதற்காக மாவட்ட நிர்வாகம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சான்றிதழ் வழங்க முகாம்

மேலும், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சான்றிதழ்கள், வாக்காளர் அட்டை, ஆதார் அட்டை, குடும்ப அட்டைகளை இழந்தவர்களுக்கு ஊத்தங்கரை மற்றும் போச்சம்பள்ளி வட்டாரங்களில் 13 இடங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தி புதிய சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளது. மேலும், பாதிப்புக்குள்ளான மாணவ, மாணவிகளுக்கு புதிய பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சிகளில், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான், மாவட்ட அறங்காவல் குழு தலைவர் எஸ்.ரஜினி செல்வம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நரசிம்மன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கதிரவன், ஒன்றிய குழு துணைத்தலைவர் சத்தியவாணி செல்வம், வட்டாட்சியர் திருமால், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாலாஜி, தவமணி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தொட்டப்பெட்டா ஊராட்சியில் பகுதிநேர நியாயவிலை கடைகள்

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்

நீலகிரி, டிச. 5–

நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியம், தொட்டபெட்டா ஊராட்சிக்கு உட்பட்ட கோவில்மேடு மற்றும் கேத்தி பேரூராட்சிக்கு உட்பட்ட புதுலைன் மந்தாடா ஆகிய பகுதிகளில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் முன்னிலையில், கூட்டுறவுத்துறையின் சார்பில் புதிய பகுதிநேர நியாய விலைக்கடைகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார்.

பின்னர், அவர் தெரிவித்ததாவது:–

நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், உல்லாடா பகுதியில் இயங்கி வரும் நியாய விலைக்கடையில் உள்ள 1,020 குடும்ப அட்டைகளில், பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று, அங்கிருந்து 222 குடும்ப அட்டைகளை பிரித்து, புதுலைன் மந்தாடா பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடையினையும், உதகை வட்டம், ஆடாசோலை பகுதியில் இயங்கி வரும் நியாய விலைக்கடையில் உள்ள 584 குடும்ப அட்டைகளில், பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று, அங்கிருந்து 164 குடும்ப அட்டைகளை பிரித்து, கோவில்மேடு என்ற பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக்கடையும், பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அந்தந்த பகுதியிலுள்ள பொதுமக்கள் அத்தியாவசிய பொருட்கள் பெறுவதற்கு தொலைதூரம் செல்லாமல், தங்களது பகுதியின் அருகிலேயே செயல்படும் பகுதி நேர நியாய விலைக்கடைகளில் அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக் கொள்ள முடியும்.

புதுலைன் மந்தாடா பகுதி நேர நியாய விலைக்கடையானது வாரத்தின் சனிக்கிழமையிலும், கோவில்மேடு பகுதி நேர நியாய விலைக்கடையானது வாரத்தின் செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளிலும் திறந்திருக்கும் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளின்போது, கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு, உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர். கணேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா, உதகை வருவாய் கோட்டாட்சியர் சதீஷ், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் தயாளன், துணைப்பதிவாளர் அய்யனார், மாவட்ட வழங்கல் அலுவலர் ரவிச்சந்திரன், உதகை நகரமன்றத் துணைத்தலைவர் ரவிக்குமார், கேத்தி பேரூராட்சித்தலைவர் ஹேமமாலினி, கேத்தி பேரூராட்சி செயல் அலுவலர் நட்ராஜ், குன்னூர் வட்டாட்சியர் ஜவஹர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தார்.

ஈரோடு பெரியார் நகர் பகுதி அண்ணா திமுக சார்பில் அதன் அலுவலகத்தில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் எட்டாம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி அவரது படத்திற்கு பகுதி செயலாளர் இரா.மனோகரன் தலைமையில் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இதில், முன்னாள் துணை மேயர் கே.சி.பழனிசாமி, முன்னாள் எம்பி செல்வகுமார சின்னையன், முன்னாள் எம்எல்ஏ பி.சுப்பிரமணி, பகுதிச் செயலாளர்கள் சூரம்பட்டி ஜெகதீஷ், சுப்ரமணி, கோவிந்தராஜ், எம்.ஜி.பழனிசாமி, தங்கமுத்து, தமிழ்நாடு தனியார் அண்ணா மின் அமைப்பு மாநிலச் செயலாளர் மின் மணி, மொடக்குறிச்சி தெற்கு ஒன்றிய செயலாளர் மயில்சாமி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் கணபதி மற்றும் அண்ணா திமுக நிர்வாகிகள் சோலா லோகநாதன், ஜீவா மனோகரன், ஜீவா பழனிசாமி, ஜீவா நாகராஜ், சந்திரசேகர், பாவை அருணாசலம், பாலச்சந்திரன், தர்மலிங்கம், கோல்ட் சண்முகம், சபாபதி, திருமலை, டாடி சரவணன் மற்றும் பெரியார் நகர் பகுதி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அறிவிப்பு

நொடித்தல் மற்றும் திவால்நிலை குறியீடு, 2016 (“குறியீடு”) மற்றும் நொடித்தல் மற்றும் இந்திய திவால்நிலை வாரியத்தின் விதிமுறைகள், 2016–ன் விதி 37A–ன் (கலைப்பு நடைமுறை) கீழ் ஈசன் புராடக்ட்ஸ் ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட் (கலைப்பில் உள்ளது) விஷயத்தில் எளிதில் காசாக்க முடியாத சொத்து (“NRRA”) பரிமாற்றம் அல்லது ஒதுக்கீட்டிற்கான விருப்பக் கருத்துரு அழைப்பு

CIN: - U51102TN1964PTC005248:

நொடித்தல் மற்றும் திவால் நிலை குறியீடு, 2016 (‘‘குறியீடு’’) மற்றும் நொடித்தல் மற்றும் இந்திய திவால்நிலை வாரியத்தின் விதிமுறைகள், 2016–ன் விதி 37–Aன் (கலைப்பு நடைமுறை) கீழ் ஈசன் புராடக்ட்ஸ் ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட்டிற்கு (கலைப்பில் உள்ளது) (‘‘கார்ப்பரேட் கடனாளி’’) சொந்தமான கீழ்க்குறிப்பிட்டுள்ள எளிதில் காசாக்க முடியாத சொத்தை (NRRA) ‘‘உள்ளது உள்ளபடி’’, ‘‘எங்கு உள்ளதோ அதே நிலையில்’’ மற்றும் திருப்ப இயலாத முறையில் மாற்றிக் கொள்ள அல்லது ஒதுக்கிக் கொள்ள (assisnment) விருப்பமுள்ளவர்களிடமிருந்து விருப்ப கருத்துரு வரவேற்கப்படுகிறது என்று பொதுமக்களுக்கு கீழ்க்கையொப்பமிட்டவர் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கிறார்.

நொடித்தல் மற்றும் திவால் நிலை குறியீடு, 2016ன் பிரிவு 6ன்படி NCLT முன் நிலுவையில் உள்ள IA 373/2023ல் தாக்கல் செய்யப்ட்டுள்ள PUFE விண்ணப்பத்தில் அடங்கிய அனைத்து உரிமைகளும் ரூ.117 கோடி மதிப்பிலான நிறுவனத்தின், வங்கிக் கணக்குகளில் உள்ள பணம் மற்றும் இருப்புகளைத் தவிர, மீதமுள்ள அனைத்து விற்கப்படாத/எளிதில் காசாக்க இயலாத சொத்துக்கள்.

2022–23ம் நிதி ஆண்டுக்கான வருமான வரி கணக்கின்படி முன்னெடுத்து செல்லப்பட்டுள்ள நஷ்டம் சுமார் ரூ.100 கோடி.

விருப்பமுள்ள நபர்கள் மேலும் விவரங்களுக்கு liquidatoreasunproducts@gmail.comக்கு மின்னஞ்சல் அனுப்பலாம். காலக்கெடு பின்வருமாறு:

விருப்ப கருத்துரு அழைப்பு வெளியிடும் தேதி	06/12/2024
தகுதி ஆவணங்களை சமர்பிப்பதற்கான கடைசி தேதி	20/12/2024
தகுதியான பங்கேற்பாளர்களின் அறிவிப்பு தேதி	21/12/2024
ஆய்வு/சரிபார்ப்புக்கான கடைசி தேதி	28/12/2024
EMDஐ செலுத்துவதற்கான கடைசி தேதி	29/12/2024
விரிவான offerகளை சமர்ப்பிக்க கடைசி தேதி	31/12/2024

பங்குதாரர்களின் ஆலோசனைக் குழுவுடன் (SCC) கலந்தாலோசித்து பெறப்பட்ட offerகளை மதிப்பாய்வு செய்து மேலும் நடைமுறை, விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து கலைப்பு அலுவலர் அறிவுறுத்துவார். பெறப்பட்ட அனைத்து அல்லது ஏதேனும் offerகளை நிராகரிப்பதற்கான உரிமையை கலைப்பு அலுவலருக்கு உள்ளது.

ஜி.முகுந்தன், கலைப்பு அலுவலர்
ஈசன் புராடக்ட்ஸ் ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட்
29A முதல் பிரதான சாலை, ஏரி திட்டம்,
முகப்பேர், சென்னை 600037
மொபைல் : +91 9444123537
மின்னஞ்சல் : liquidatoreasunproducts@gmail.com

தேதி: 06/12/2024

kotak Kotak Mahindra Bank

ஆன்லைன் இ– ஏல முறையில் சொத்து விற்பனை

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051
கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க், எண்.1050, 2வது தளம், சீனிவாச பவன், அவினாசி சாலை, கோயம்புத்தூர் 641018.

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 8(6)–ன்கீழ் அசையா சொத்துக்கள் விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு “புல்லாடன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்” (இனி “FHFCL” என்று குறிப்பிடப்படுகிறது) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதாவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், 25.07.2024 அன்று கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் (இனி “வங்கி/ கோம்பேஸி/ஈடுபெற்ற கடன் வழங்கியவர்” என்று குறிப்பிடப்படுகிறது) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி (இனி “பிளெடிஜ்டபல்” என்று குறிப்பிடப்படும்) அடமானம் வைக்கப்பட்ட/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தை (இனி ஈடுபெற்ற சொத்து என்று அழைக்கப்படும்) கவர்ஸீனம் எடுத்துக் கொண்டார். கடன் கணக்கு எண்.6034075102342516ன் கீழ், கீழே உள்ள விவரங்களின்படி திரு பழனிசாமி பி. திருமதி ராஜாமணி பி. திரு கிரிமுருகன் பி & திரு ரமேஷ் பி. ஆகியோர் பெற்ற கடன் தொகையில் 04.12.2024 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.65,97,804/–(ரூபாய் அறுபத்தைந்து லட்சத்து தொள்ளாயிரத்து எண்ணூற்று நான்கு மட்டும்) மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக 2002ம் ஆண்டு சர்பாசி சட்டத்தின் விதிகளின் கீழ் “எங்கே எப்படி இருக்கிறோ அப்படியே, எவ்வாறு உள்ளோ அது போல்” வங்கியானது மின்னணு ஏலத்தின் மூலம் ஈடுபெற்ற சொத்தை விற்க முடிவு செய்துள்ளது என்று கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

விவரங்கள்	விவரங்கள்
ஏலத் தேதி	20.01.2025
ஏலம் நடைபெறும் நேரம்	மதியம் 12:00 முதல் மதியம் 1:00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன்
சிரர்வ் விலை	ரூ.64,00,000/- (ரூபாய் அறுபத்து நான்கு லட்சம் மட்டும்)
டேவனித் தொகை டெபாசிட் (EMD)	ரூ.6,40,000/- (ரூபாய் ஆறு லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்)
Kyc உடன் Emd ஐ சமர்பிப் பதற்கான கடைசி தேதி	18.01.2025 அன்று மாலை 6:00 மணி வரை (இந்திய நேரப்படி)
ஈடுபெற்ற ஆஸ்திகள் குறித்த விவரம்	சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். நாமக்கல் மாவட்டம், நாமக்கல் பதிவு மாவட்டம், திருச்செங்கோடு சார் பதிவு மாவட்டம், திருச்செங்கோடு தாலுக்கா, ஆனங்கூர் கிராமம், ஆர்.எஸ். எண்.479/8பி2ஏ, பி.ஏ.3.40ல், கிஸ்ட் ஆர்.எஸ்.5.27, இதில் பி.ஏ.1.13 சென்ட். நிலம் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. மனை எண்.10பி, அதன் எல்லைகள் வருமாறு: கிழக்கு : மாரிமுத்து கவுண்டருக்கு சொந்தமான மீதி நிலம், மேற்கு : ராமசாமி நிலம், வடக்கு : கிழக்கு மேற்காக சாலை, தெற்கு : கிழக்கு மேற்காக சாலை. விஸ்தீரணம் : கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் 54 அடி, தெற்குப் பக்கம் 54 அடி, வடக்கு தெற்காக கிழக்குப் பக்கம் 81, மேற்குப் பக்கம் 89 அடி. மொத்தம் 4590 சதுர அடி நிலம் மற்றும் அங்குள்ள மாமூல் பாதை மற்றும் வண்டிப் பாதை உரிமை உட்பட.
தெரிந்தவரை விலைங்கள் : இல்லை	

சர்பாசி சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தம் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் திரு. விக்னேஷ் பிரபு எஸ். (தொலைபேசி எண்.+91 9092919036), திரு. வேல்முருகன் கே (தொலைபேசி எண்.+919884718338) & திரு. விஷால் ஆதிஷேஷன் (தொலைபேசி எண்.+99 4101 6600) அவர்களை தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களை அறிந்து கொள்ள ஏலதாரர் வங்கியின் IVR எண் (+91 9152219751)ஐ தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.com& அளிக்கப்பட்டுள்ள லிங் https://www.kotak.com/en/bank-auctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம் : நாமக்கல், தமிழ்நாடு
தேதி: 05.12.2024

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

homefirst We'll take you home

Home First Finance Company India Limited
CIN: L65990MH2010PLC240703,
Website: homefirstindia.com Phone No.: 180030008425 Email ID: loanfirst@homefirstindia.com

இணைப்பு–IV–A [விதி 8 (6)க்கான விதிமுறைகளைப் பார்க்கவும்)
அசையா சொத்துக்களின் விற்பனைக்கான அறிவிப்பு

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டம் 2002ன் விதி 8(6)ன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் கடன்தாரர்(கள்) மற்றும் உடன் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில் காலம் (ii)ன்படி, ஈடுபெற்ற கடன்தாரரிடம் அடமானம் வைக்கப்பட்ட காலம் (iii)ல் விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள், கீழே விவரிக்கப்பட்டுள்ள நிலுவை தொகை மற்றும் வட்டியை திரும்ப பெற அவை ஹோம் பார்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டது மற்றும் அதேசமயம் நிலுவைத் தொகையை திருப்பிச் செலுத்தத் தவறியதன் விளைவாக, மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(2)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கீழ்க்கையொப்பமிட்டவர் மேற்சொன்ன சொத்தை விற்பனை செய்வதன் மூலம் நிலுவையை தொகையை பெறலாம் என திட்டமிட்டுள்ளார். மேலும் இது இங்கு விவரிக்கப்பட்டுள்ளபடி “எங்கே எப்படி எவ்வாறு இருக்கிறது” என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். ஹோம் பார்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டிற்கு காலம்(i)ல் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை கடன்தாரர்(கள்)/ உடன் கடன்தாரர்களிடமிருந்து திரும்ப பெற ‘‘ஆன்லைன்’’ மூலம் ஏலம் விடப்படும்.

வ. எண்.	கடன்தாரர்(கள்) மற்றும் உடன்கடன்தாரர்கள் பெயர்	சொத்து விவரங்கள்	டிமாண்ட் நோட்டீஸ் தேதி	டிமாண்ட் நோட்டீஸ் தொகை	சுவாதீனத் தேதி	சந்தை மதிப்பு	இஎம்டி தொகை (ரூ.)	மின்னணு ஏலத்தேதி மற்றும் நேரம்	இஎம்டி மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்க கடைசி தேதி மற்றும் நேரம்	அங்கீகரிக் கப்பட்ட அதிகாரி எண்
1	சிந்து தேவர், சாருமதி அன்பழகன்	வீடு எண் பழைய எஸ்.எப்.எண்.456/2, புதிய எஸ்.எப்.எண்:456/2பிஇ, சூலூர் கிராமம் & டவுன் பஞ்சாயத்து, சூலூர் சார் பதிவு அலுவலகம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, 641402	03-01-2024	839,250	13.03.2024	1,200,000	120,000	21-12-2024 (காலை 11.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை)	19.12.2024 (மாலை 5.00 மணி வரை)	9500289348

மின்னணு ஏல சேவை அளிப்பவர்	மின்னணு ஏல இணையதளம்/விவரங்கள், இதர விதி மற்றும் நிபந்தனைகள்	இஎம்டி/இதர தொகையை டெபாசிட் செய்ய கணக்கு எண்.	கிளை IFSC Code	பயனாளி பெயர்
நிறுவனத்தின் பெயர்: இ–ப்ரோகியூர்மெண்ட் டெக்னாலஜிஸ் லிமிடெட் (Auction Tiger). ஹெல்ப் லைன் எண்: 079–35022160 / 149 / 182 தொடர்பு நபர்: ராம் சர்மா – 8000023297 மின்னஞ்சல் ஐடி: ramprasad@auctiontiger.net மற்றும் support@auctiontiger.net	http://www.homefirstindia.com https://homefirst.auctiontiger.net	912020036268117- ஹோம் பார்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட் ஆக்சிஸ் வங்கி லிமிடெட், எம்ஜிஆர், அந்தேரி கிழக்கு	UTIB0000395	அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஹோம் பார்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்

ஏல அதிகாரிப்பு தொகை – ரூ. 10,000/–. வெப் போர்டல் (https://homefirst.auctiontiger.net) வழங்கப்பட்ட மின்னணு ஏல தளத்தின் மூலம் கீழ்க்கையொப்பமிடப்பட்டவரால் விற்பனை செய்யப்படும். ஆன்லைன் மின்னணு ஏல படிவம், அறிவிப்பு, ஆன்லைன் ஏல விற்பனையின் பொது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின்னணு ஏல டெண்டர் ஆவணம் போர்ட்டல் தளத்தில் கிடைக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு தெரிந்த அளவில் சொத்துக்களின் மீது எந்த வில்லங்கமும் இல்லை. எவ்வாறாயினும், ஏலத்தை சமர்ப்பிப்பதற்கு முன்னர், சொத்துக்கள்/ஏலத்தில் வைக்கப்பட்ட உரிமைகள்/உரிமை கோரல்கள்/ நிலுவை தொகைகள்/சொத்துக்களைப் பாதிப்பது குறித்து ஏலதாரர்கள் தங்களது சொந்த சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். ஹோம் பார்ஸ்ட்டின் எந்தவித பொறுப்பையும் மற்றும் பிரதிநிதித்துவத்தையும் மின்னணு ஏல விளம்பரம் அமைக்காது. ஹோம் பார்ஸ்ட்–டிற்கு அறியப்பட்ட அல்லது தெரியாத, தற்போதுள்ள மற்றும் எதிர்காலத்தில் உள்ள அனைத்து வில்லங்கங்களுடன் இந்த சொத்து விற்கப்படுகிறது. எந்தவொரு மூன்றாம் தரப்பு உரிமை கோரல்கள்/உரிமைகள்/ நிலுவைத் தொகைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/ ஈடுபெற்ற கடன் அளித்தவர் எந்த வகையிலும் பொறுப்பேற்க மாட்டார்கள். 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட விதிகள்/நிபந்தனைகளுக்குட்பட்டு விற்பனை இருக்கும். **மொழிபெயர்ப்பில் முரண்பட்டால்,